V10T

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

விருதுநகர் மாவட்டம்
மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2024

-----

வகுப்பு 10

தமிழ்

காலஅளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி -I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

2) 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது .............
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத்துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

3) 'கிண்கிணி' என்ற அணிகலன் அணியப்படும் இடம் .............
அ) கால் ஆ) காது இ) தலை ஈ) நெற்றி

4) தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

5) குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ..............
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

6) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது .............
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

7) 'ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு' என்கிறார் ............
அ) மு.கு.ஜகந்நாதர் ஆ) மணவை முஸ்தபா
இ) தொல்காப்பியர் ஈ) ஷேக்ஸ்பியர்

8) உயர்திணை ............ பிரிவுகளை உடையது.
அ) இரண்டு ஆ) நான்கு இ) மூன்று ஈ) ஐந்து

9) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ..............
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

10) செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜீன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்
செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாயிரம் என்பது எனக்குப் பெருமையே
செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

11) 'மொழிஞாயிறு' என்றழைக்கப்படுபவர் ..............
அ) தமிழழகனார் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) பெருஞ்சித்தரனார் ஈ) நப்பூதனார்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15)

'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று'

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

12) பாடலை இயற்றியவர் யார்?
அ) குலசேகராழ்வார்   ஆ) பெருங்கௌசிகனார்
இ) செய்குதம்பிப் பாவலர்   ஈ) கீரந்தையார்

www.Padasalai.Net   www.Trb Tnpsc.com

13) அடிஎதுகையை எழுதுக.
அ) அருளை - தெருளை   ஆ) மருளை - திருத்தி
இ) அருளை - பெருக்கி   ஈ) அருளை - மருளை

14) ‘ஆவிக்கு’ - என்ற சொல்லின் பொருள் ...........
அ) உயிருக்கு   ஆ) அறிவுக்கு   இ) அருளுக்கு   ஈ) கல்விக்கு

15) பாடல் இடம்பெறும் நூல் ..............
அ) பெருமாள் திருமொழி   ஆ) நீதிவெண்பா
இ) பரிபாடல்   ஈ) மலைபடுகடாம்

## பகுதி - II
### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4×2=8**

16) விடைகளுக்கு ஏற்ற வினாக்கள் அமைக்க.
அ) கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.
ஆ) பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும் அவை போன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

17) ‘காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்’ - உவமை உணர்த்தும் கருத்து யாது?

18) வடமொழிக் கதையைத் தழுவி மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் நான்கனை எழுதுக.

19) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக

20) ‘உரைப்பாட்டு மடை’ என்பது யாது?

21) ‘விடல்’ - என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5×2=10**

22) **அகராதி காண்க.**
அ) உழுவை -   ஆ) ஆசுகவி -

23) இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்த பக்கம் இருக்கிறது? இதோ . . . இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?
மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்து எழுதுக.

24) பகுபத உறுப்பிலக்கணம் தருக. பதிந்து

25) **கலைச்சொல் அறிக**
அ) Whirlwind -
ஆ) Devotional literature -

26) **உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**
அ) மழைமுகம் காணாப் பயிர் போல
ஆ) கண்ணினைக் காக்கும் இமை போல

27) வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

28) **ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**
அ) புதுச்சேரி   ஆ) புதுக்கோட்டை

## பகுதி - III (மதிப்பெண்கள் - 18)
### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

29) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**
ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர். இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ. வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன. இவை மனித[illegible] உணர்வுகளைப்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்படுகின்றன. [illegible] வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

அ) 'பெப்பர்' என்பது யாது?

ஆ) தற்போது எந்த மூன்று வகையான ரோபோக்கள் கிடைக்கின்றன?

இ) பெப்பரை எவ்வெற்றிற்கெல்லாம் பயன்படுத்துகிறார்கள்

30) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'.
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

31) **படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.**



## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**
**வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

32) மன்னன், இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

33) வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

34) **அடிபிறழாமல் எழுதுக.**

அ) 'நவமணி வடக்க .......' எனத் தொடங்கும் 'தேம்பாவணிப் பாடல்.

**(அல்லது)**

ஆ) 'விருந்தினனாக ஒருவன் .......' எனத் தொடங்கும் 'காசிக்காண்டம்' பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

35) 'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே!
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடிஆடி ஓய்ந்துறங்கு!' - இத்தாலாட்டுப்பாடலில் அமைந்துள்ள தொகைநிலைத் தொடர் வகைகளை எழுதுக.

36) கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு
தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) 'இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து'
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38) அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை
இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

39) அ) உங்கள் மாவட்டத்தில் நடைபெற்ற அரசுப்பொருட்காட்சிக்கு, நீ சென்று வந்ததைப் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.


**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

www.Padasalai.Net www.Trb Tnpsc.com



41) மதுரை மாவட்டம், கதவு எண் 10, கம்பர் நகர், அரிட்டாபட்டி என்ற முகவரியில் வசிக்கும் பாலகுமாரி, மதிவதனா நிறுவனம் ஒன்றில் தட்டச்சர் பணி வேண்டி தன் விவரப்பட்டியலை நிரப்புக. தேர்வர் தன்னைப் பாலகுமாரியாகக் கருதிக்கொள்க.

42) அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை போன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தினை எழுதுக.

(அல்லது)

ஆ) **மொழிபெயர்க்கவும்:**

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3×8=24**

43) அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44) அ) 'மங்கையராய்ப் பிறப்பதற்கே' என்ற துணைப்பாடத்தின் வாயிலாக முன்னேற்றம் அடைந்தவர்களில் எவையேனும் நால்வரின் வாழ்வியல் நிகழ்வுகளை எழுதுக.

(அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரி.

45) அ) முன்னுரை - பிறப்பு - கல்வி - விண்வெளிப் பயணம் - கொலம்பியா விண்கல நிகழ்வு - விருதுகளும் அங்கீகாரங்களும் - முடிவுரை

(அல்லது)

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப் பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

- - - - - - -

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com